<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**114/2020

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ம் நாள் PW 1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 21.04.2026

**Pw**1 (**கமலாத்தாள்**)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 5 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

5 ம் பிரதிவாதி தரப்பில் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். என் மாமா பெயர் முத்துசாமி, அவரின் தந்தை பெயர் நாராயண கவுண்டர் என்றால் சரிதான். பெருந்துறை தாலுக்கா திருவாச்சி கிராமம் பிச்சாண்டம்பாளையம் அஞ்சல் பள்ளபாளையம் பாமடை காட்டு தோட்டத்தில் இருக்கும் நாராயண கவுண்டர் மகன் 54 வயதுள்ள முத்துசாமி கவுண்டர் என்பது என் தாய் மாமா என்றால் சரிதான். அவர் அவ 825/1992 என்ற வழக்கை அவரது தோட்டத்திற்கு அருகில் இருக்கும் ராமசாமி கவுண்டர் என்பவர் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் அது தவறு. என் மாமா சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்ததால் தான் 1992 ம் ஆண்டே அவர் தனது தோட்டத்தின் அருகில் இருக்கும் நபர் மீது வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 26.11.1992 ல் பத்திர எண் 1986/1992 என்ற நாராயண கவுண்டர் மகன் முத்துசாமி கவுண்டர், ராமாத்தாள், சௌந்தரம், மல்லிகா ஆகியோர் திருவாச்சி கிராமம் ரீச 451/1 முதல் 18 , 452/2 முதல் 12 வரையான சர்வே எண்களில் 0.32 ஏக்கர் தோட்டத்தை ஒரு முத்துசாமி, பழனியம்மாள், ரங்கசாமி ஆகியோர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். ஆனால் அது மோசடியானது. அந்த கிரய பத்திரம் **பிசாஆ 2.** எதிர்வழக்குரையில் மேற்படி கிரயம் குறித்து சொல்லப்பட்டள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். இன்றைய தேதி வரை பிசாஆ 2 கிரயம் குறித்து எனது வழக்குரையை திருத்தம் செய்யவோஅல்லது மேற்படி கிரயத்தில் உள்ள தரப்பினர்களை கட்சி சேர்க்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை என்றால சரிதான். முத்துசாமி கவுண்டர், ராமாத்தாள்,

சௌந்தரம், மல்லிகா ஆகியோர்கள் பத்திர எண் 1901/2000 படி சர்வே எண் 426/1 முதல் 6 வரை ஏக்கர் 2.53 ஐ பாரப்பாளையம் தொடக்க கூட்டுறவு வேளான்மை வங்கியில் அடமானம் வைத்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் மேற்படி அடமானம் பற்றி குறிப்பிட்டுள்ளதை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி. எனக்கு அனைத்து விவரங்களும் தெரிந்தும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 29.12.2014 ல் என் மாமா முத்துசாமி இறந்து விட்டார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 30.10.2018 ல் ராமாத்தாள், சௌந்தரி மற்றும் மல்லிகா ஆகியோர் பாரப்பாளையம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கியில் கடன் தொகையை செலுத்தி மேற்படி சங்கமும் 5080/2018 என்ற ரசீது ஏற்படுத்தி கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என் தாயார் சொத்தை அனுபவித்து வந்ததாக சொல்வது தவறு என்றும் முத்துசாமி கவுண்டர் தனது தகப்பனார் நாராயண கவுண்டர் 27.05.1982 ல் இறந்தது பின்னிட்டு முத்துசாமி கவுண்டர் மட்டும் சொத்தை தனித்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் அவர் சொத்தை விற்பனை செய்தும், அடமானம் வைத்தும் அனுபவித்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பட்டா முத்துசாமி கவுண்டர் பெயரில் எந்த ஆண்டு மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. நாராயண கவுண்டர் இறந்த பின் நானோ என் தாயாரோ தாவா சொத்தை பட்டா மாறுதலுக்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 10.02.1999 ல் முத்துசாமி கவுண்டர்,ராமாத்தாள்,சௌந்தரி மற்றும் மல்லிகா பூவம்பாளையம் கிராமம் ரீச 18/1 ல் 2-1/2 சென்ட் நிலத்தை சின்னப்ப கவுண்டர் மகன் ராமசாமி என்பவருக்கு பத்தர எண் 297/1999 ல் விற்பனை செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மோசடி செய்து விற்பனை செய்து விட்டனர். முத்துசாமி கவுண்டர் மற்றும் அவரின் வாரிசுகள் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்ததால் தான் சொத்தை விற்பனை செய்துள்ளனர் என்றும் அந்த விவரங்களை மறைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தை கிரயம பெற்ற நபர்களை வழக்கில் சேர்க்காததாலும் கிரயம் குறித்து கேள்வி எழுப்பாததால் நான்தாக்கல் செய்துள்ள தாவா கால வரையறை தோஷத்தால் தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல. நாராயண கவுண்டர் மற்றும் முத்துசாமி கவுண்டரும் 07.08.1960 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் குறித்து நான் வழககில் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு அவசிய தரப்பினர்களையும் அவசிய சொத்துக்களையும் மற்றும் விற்ற சொத்துக்கள் குறித்து எந்த பரிகாரமும் கோராத நிலையில் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால சரியல்ல. முத்துசாமி கவுண்டர் மற்றும் அவரின் வாரிசுகள் மட்டுமே தாவா சொத்துக்களை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தனர் என்றும் அவர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(3ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

(1 மற்றும் 2 பிரதிவாதிகள் தங்களது பங்கிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது. )

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.04.21 12:47:37 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS